இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 6
முதலாவது தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 2012/2013
வர்த்தகச் சட்டம் LWU 4324
காலம்: 1 மணித்தியாலம்

---

திகதி : 7 மார்ச் 2013 காலம் : பி.ப 12.45 பி.ப 01.45

---

கீழே தரப்பட்ட வினாவிற்கு விடையளிக்க.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

இனிப்புப் பண்ட உற்பத்தியாளரான மிஹிரி, ரூபா 100,000 இற்கு 100 கிலோ கிறாம் 'தூய வெள்ளை சீனி'க்கான கட்டளையை லக்ஷ்மனிடம் விடுக்கின்றாள். மொத்த விற்பனையாளரான லக்ஷ்மன், மிஹிரியிடம் அதிகப்படியாக மா இருப்பதை அறிந்து, மிஹிரியிடம் ரூபா 100,000 பதிலாக ரூபா 85,000 இற்கு 100 கிலோ கிறாம் பெறுமதியுள்ள மாவினை கொடுப்பனவாக செலுத்தும்படி கோரினாள். மிஹிரி இவ்வாசகங்களிற்கு இணங்கினாள்.

மிஹிரி நிறத்தில் தூய வெள்ளையாக இருக்க வேண்டிய இனிப்புப் பண்டம் ஒன்றிற்கான சீனி என்பதால், அது வெள்ளையாக இருக்க வேண்டும் என விளக்கியதுடன், சரியான பொருட்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்த, மாதிரியை வேண்டினாள். லக்ஷ்மன் தூய வெண்ணிற சீனியின் மாதிரியை வழங்கினான். 100 கிலோ கிராம் சீனி வழங்கப்பட்ட போது, சில கொள்வனவாளர்களுடன் வேலை செய்து கொண்டிருந்த மிஹிரி, நேரமின்மை காரணமாக, பொருட்களை சோதனை செய்யவில்லை. இதனால் அவள் சீனியை தன் சேமிப்பு அறையில் இறக்கி வைக்குமாறு சுமப்பவர்களைப் பணித்தாள். பின்னர் மிஹிரி அச்சீனி வெண்ணிறமானதல்ல, மண்ணிறமானது என்பதையும் அத்துடன் அதனுடன் மணல் கலந்திருந்ததையும் அறிந்தாள்.

i. இல.13, 1896 பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின உட்கிடையான வாசகங்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் காணப்படத்தக்க நிவாரணங்களை மிஹிரிக்கு அறிவுறுத்துக. உமது விடையை பொருத்தமான வழக்குச் சட்டங்களுடன் ஆதாரப்படுத்துக.

(18 புள்ளிகள்)

ii. மேலே குறிப்பிட்ட உட்கிடையான வாசகங்கள் மற்றும் நிபந்தனைகளில் இருந்து லக்ஷ்மனை விடுவிக்கக்கூடிய விலக்களிப்பு வாசகம் இருந்திருப்பின் உமது விடை வேறுபடுமா? உமது விடையை காரணங்களுடன் விளக்குக.

(24 புள்ளிகள்)

- பதிப்புரிமை பெற்றது. -